133

உ

ஸ்ரீவாணீசகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை ௩.] 1915-ம் ஆ ஜூலை மீ [இதழ் ௭.

# இலௌகிகப் பகுதி.

## செல்வம்.

(புதுவைக் கலைமகள் கழகத்தின் 4-வது ஆண்டு விழாக் கோண்டாட்டத்தில் செய்த உபன்னியாசத்தின் சுருக்கம்.)

( வெண்டாமரை ௩, 102-ம் பக்கத் தொடர்ச்சி. )

"கொடி, முரசு, வெண்கொற்றக்குடை முதலிய இராச சின்னங்களைப் பிறர் கொள்ளப்பொறுமல் தானொருவனே கொண்டு, பலர்க்கும் பொதுவாந்தன்மையினின்று நீங்கிய ஆஞ்ஞா சக்கரத்தை யெல்லாத் திசைகளிலும் செலுத்தி, 'காதாற் கண்டு கண்ணுற் கூறி, அவனி முழுதும் அரசாள்கின்ற ஒரு பெரிய சக்கரவர்த்தியானவன், தன்னினும் மேம்பட்டவனுகிய ஒருவனது செல்வத்தைக் கண்டவிடத்து, தனது செல்வம் அதற்குச் சுருங்கித் தோன்றுதலாலே செல்வத்தை யிழந்தாலன்ன துன்பமெய்தி, அவனது செல்வத்திற் பொருமைகொண்டு, அச் செல்வத்தைத்

தான் பெறுதற்குரிய சூழ்ச்சிகளை யாராய்ந்து, உணவின் சுவை யையும் துயிலின் சுகத்தையும் மகளிர் இன்பத்தையும் மனத்துட் கொள்ளானாய்ப் பெருமூச்செறிந்து கவலையுற் றழிகின்ற தன்மை யையும் கண்டோம். அஃதன்றி, தலையில் விறகு சுமந்து ஊர் தோறும் சென்று திரிந்து விற்று, அதன் கூலியைக்கொண்டு கூழையும் இலைக்கறியையும் உண்டு, மனைவி மக்களை நோக்கி யின்புற்று, அயல் வீட்டினுள் சோம்பல்கொண்டு சும்மா விருக்கு மொருவனை யிகழ்ந்து கூறி, "எனக்கு நிகரில்லை" என்று ஒருவன் மனக் களிப்புற்று மகிழ்வதையும் கண்டோம். அதனால், செல்வம் என்பது சிந்தையின் நிறைவு அதாவது மனத்திருத்தியேயாம்; வறுமை யென்பது அடங்காத ஆசையேயாம். பெரிய கடலும் சிறுகும்படி உயிர்களையெல்லாம் விழுங்குகின்ற ஆசையாகிய கடலைக் கடப்பதற்கு, ஐம்புலன்களையும் வென்ற அறிவையன்றி அரிய புணை வேறொன்றில்லை. ஆதலின், திருப்புலியூரின்கண் எழுந்தருளிய கடவுளே! யான் நினது அருள்பெற்று உய்தற் குரியனெனின், பல உயிர்த் தொகுதிகளும் பிறவிக் கடலி லழுந்து மாறு அல்லல் விளைக்கும் ஆசை யெனப்படுகின்ற அவ்வறுமையி னின்றும் என்னை மீட்டு, அறிவாகிய செல்வத்தை யெனக்கு அளிப்பாயாக" என்பது மேல் ஆசிரியப்பாவால் அறியக்கிடந்த உறுதி யென்க.

நல்லது, "செல்வமென்பது சிந்தையின் நிறைவு, அல்கா நல்குரவு அவாவெனப்படும்" என்று குமரகுருபரர் கூறியவாறு வேறு யாரேனும் விளம்பியுள்ளார்களா? என்று வினவின், இதோ நாலடியார் நவில்கின்றது பாருங்கள் :

"நுண் ணுணர் வின்மை வறுமை யஃ துடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம் – எண் ணுங்கால்
பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ
கண்ணவாத் தக்க கலம்."

நுட்பமான அறிவில்லாமையே ஒருவனுக்கு வறுமை யாவது; அவ் வறிவுடைமையே பெரிய செல்வமாகும். ஏனென் றால், அறிவில்லாவிடத்துப் பொருட்செல்வம் சிறப்படைதலில்லை.

திருட்டாந்தமாக, பெண் தன்மையை விரும்பி ஆண் தன்மையை யிழந்த பேடி, கண்கள் விரும்பத்தகுந்த பூண்களைப் புனைந்திருந்தாலும் அதனால் சிறப்புண்டாகாமற் போவதுமன்றிப் பரிகசிப்புக்கும் இடமாதலை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஏன்? அறிவின்மையாலே. அறிவு என்ற ஒன்று இல்லாமல் உடம்பு முழுதும் பொன்னைப் பூட்டியிருப்பினும் அவட்குச் சிறப்புண்டாதல் இல்லையானால் அப்போது எதை நாம் செல்வமென்று சொல்வது? அன்பர்கள் ஆலோசித்துப் பார்க்க.

"என்ன ஐயா! சிந்தையின் நிறைவு அதாவது ஆசையின்மையே செல்வமென்றும் ஆசையுடைமையே வறுமையென்றும் முன்பு மொழிந்தீர்கள், இப்போது அறிவுடைமை செல்வமென்றும் அறிவில்லாமை வறுமையென்றும் அறைகின்றீர்களே?" என்று யாரேனும் கேட்பவர்களுண்டெனின், அவர்கட்கு யாம் கூறுகின்ற சமாதானம் இதுவாகும்:

அறிவின் காரியமே ஆசையின்மை யாதலினாலும், அறியாமையின் காரியமே ஆசையுடைமை யாதலினாலும், காரிய காரண வொற்றுமைபற்றி அறிவு என்றாலும் அவாவின்மையென்றாலும் ஈண்டு ஒன்றேயாகும், அறியாமை யென்றாலும் அவாவுடைமை யென்றாலும் ஒன்றே. அறிவுடைமையாற்றான் அவா நீங்குவது, அறியாமையினாற்றான் அவா வுண்டாவது, ஆதலின் யாதொரு முரணுமில்லை.

இன்னோரன்ன நியாயங்களால் எவற்றினும் திருத்தியடையாத ஆசையே ஒருவனுக்கு வறுமையென்பதும், அவ்வாசையை யழித்து இன்பம் பயக்கும் அறிவுடைமையே செல்வமென்பதும் பசுமரத் தாணியாயின.

அன்பர்காள்! "வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை, யாண்டு மஃதொப்பதில்." அவாவை யழிக்கும்படியான அவ் வறிவின் செல்வத்தை நாம் குறைவறப் பெற்றுக்கொண்டோமானால், என்றும் அழியாத இன்பத்தை யடையலாம்.

உலகத்தில் நம்மால் அனுபவிக்கப்படும் இன்பங்களெல்லாம் நிலையுடையனவல்ல. தோன்றி உடனே யழிந்துபோகின்றன.

இன்பம் என்றால் அதன் முடிவில் துன்பம் இருந்துகொண்டே யிருக்கிறது. ஆதலினாற்றான் இவ்வுலக இன்பத்திற்குச் சிற்றின்பம் அதாவது சிறிய இன்பம் எனப் பெயரிட்டனர் பெரியோர். சிற்றின்பம் எனவே பேரின்பம் ஒன்றுண்டென்பது தானே பெறப்படுகின்றதன்றோ?

அப் பேரின்பமோ அழிவில்லாதது. ஆதியந்தமற்றது. சிற்றின்பத்தை ஒரு சிறு குட்டையாகவும் பேரின்பத்தைப் பெரிய கடலாகவும் சொல்லலாம். இன்னும் ஒரு குடத்திலுள்ள நீரைப் பேரின்பத்திற்கும் அக் குடத்து வெளிப்புறத்திற் கசியும் நீர்த் துளிகளைச் சிற்றின்பத்திற்கும் உவமை கூறுவர் பெரியோர். இத் திருட்டாந்தங்க ளனைத்தும் பெரிதென்பதற்கு மாத்திரமேயன் றிப் பூரண வுவமானங்க ளாகமாட்டா.

"பூமியின் இராச்சியாதிபத்தியம், நோயற்ற யௌவன திடகாத்திரம், வித்தியாதி சப்த குணங்கள் முதலியவை ஒருவனுக் கிருந்தாலும் மானுட சுகத்திற்கு முடிவுண்டு; மானிட கந்தருவரெனப்பட்டவர்கள் அரசர்களைக்காட்டிலும் நூறுமடங்கு சுகத்தை யடைகின்றார்கள்; தேவ கந்தருவர்கள் இவர்களைவிட நூறுமடங்கு சுகமுள்ளவர்கள்; இவர்களைவிடப் பிதிர்க்கள் நூறுமடங்கு சுகமுடையவர்கள்; பிதிர்க்களைப் பார்க்கிலும் அஜான தேவர்கள் நூறுமடங்கு சுகிகள்; கர்ம தேவர்கள் இவர்களினும் நூறுமடங்கு சுகிகள்; முக்கிய தேவர்களுடைய சுகம் இவர்களுக்கு நூறுமடங்கு அதிகம்; இந்திரன் சுகம் தேவர்களினும் நூறுமடங்கு; தேவ குருவான பிரகஸ்பதியின் சுகம் இந்திரனுக்கு நூறுமடங்கு; பிரஜாபதியின் சுகம் குருவுக்கு நூறுமடங்கு; பிரம்மத்தின் சுகம் பிரஜாபதிக்கு நூறுமடங்கு; பிரம்மத்துக்கு ஒருகாலுந் துக்கமில்லை; இராஜன் முதல் பிரம்மம் வரையிலுமுள்ள சுகத்தை இருதயத்தில் காமனை யெரித்தவன் அதாவது ஆசையை யழித்தவன் எப்போதும் அடைவான்."

இவ்விதம் தைத்திரீயோபநிஷத்தில் சுகத்தின் கிரமம் சொல்லப்படுகின்றது. அப் பிரம்ம சுகத்தைத்தான் பேரின்பமென்றும் பிரம்மாநந்தமென்றும் சிவாநந்தமென்றும் பெரியோர்

கூறுவர். அதுதான் நிரதிசய இன்பமென்றும் முக்தி யின்ப மென்றும் சொல்லப்படும். அவ் வின்பத்தின் லேசானுலேசங்கள்தான் நாம் ஐம்பொறிகளா லனுபவிக்கப்படும் இன்பங்களனைத்தும். "எந்தப் பொருள்களினின் றெய்தியிடு மின்பனைத்தும் அந்தப் பிரமத்தின் ஆநந்த லேசமதே" என்ற பெரியோர் திருவாக்கை அன்பர்கள் கவனிக்க.

"இருக்கட்டும். பேரின்பம், நிரதிசய வின்பம், முக்தி யின்பம் என்று சொல்லுகின்றீர்களே, அது எப்படியிருக்கும்?" என்று கேட்பவர்களும் சிலருண்டு. நல்லது, இவர்களா லனுபவிக்கப்படும் சிற்றின்பம் இப்படியிருக்கிறதென்று இவர்கள் சொல்வார்களானல், பின்னர் நாம் பேரின்பத்தைப்பற்றிப் பேசுவோம். சர்க்கரை தித்திப்பா யிருக்குமென்று சொல்லலாம், தித்திப்பு எப்படி யிருக்குமென்றல் "தின்றுபார்" என்றுதான் செப்பவேண்டும். ஏனெனில், அனுபவத்தை வாயினுற் சொல்வதெப்படி? நம்மா லனுபவிக்கப்படும் சிற்றின்பமே இப்படி யிருக்கிறதென வாக்கால் வழுத்தமுடியாதபோது, வாக்கும் மனமும் இறந்தவிடத்தில் தானுக ஊற்றெடுக்கின்ற ஆநந்தப் பிரவாகத்தை நாம் எப்படி நவில முடியும்?

கரணங்களையெல்லாம் ஒடுக்கி அந்தர் முகப்பட்டு நிருவிகற்ப சமாதியில் பிரம்மாநந்தத்தை யனுபவித்த ஒரு பெரியோர் பகிர்முகப்பட்டபோது தாம் அடைந்த ஆநந்தத்தைப் பற்றிக் கூறுகின்றார்:

"வாசாவக்து மசக்யமேவ மனஸாமந்தும் நவாசக்யதே, ஸ்வாநந்தாம்ருத பூரபூரித பரப்ரஹ்மாம்புதேர்வைபவம், அம்போராசி விசீர்ணவார்ஷிக சிலாபாவம் பஜன்மே மனேயஸ்யாம் சாம்சலவே விலீன மதுனனந்தாத்மனு நிர்வ்ருதம்."

"பரப்பிரம்மமென்னும் மகா சமுத்திரத்தினுடைய பெருமையை வாக்கினுற் சொல்வதற்கும் மனதால் தெரிந்துகொள்வதற்கும் சாத்தியமன்று. இந்தப் பிரம்மாநந்தமென்னும் சமுத்திரத்தில் லீனமாய் என் மனது எப்படி யிருக்கிறதெனின், சமுத்திரத்தில் விழ்ந்த ஆலாங்கட்டியைப்போல ஐக்கிய பாவத்தை

யடைந்தது. இப்போது சுக ரூபத்தினால் சந்தோஷிக்கின்றது"
என்றுகூறினார். ஆனதுபற்றித்தான்,

"நானற்ற போதத்தே நானான முத்தியை
நானென்று னஞ்சொல்வ துந்தீபற
நான்மறைக் கெட்டாதென் றுந்தீபற"

என்று கூறிற்று அவிரோத வுந்தியார்.

அறிஞர்காள்! வாக்கு மனாதீதமான அம் முத்தி யணங்கைக்கூடி நாம் நித்தியசுகம் பெறவேண்டாவா? "இராஜன் முதல் பிரம்மம் வரையிலுமுள்ள சுகத்தை மனதில் ஆசையை யொழித்தவன் எப்போதும் அடைவான்" என்ற சுருதி வாக்கியத்தைக் கவனியுங்கள். ஆசை எதனால் ஒழியும்? அறிவினாலன்றோ? ஆகவே ஞான சம்பத்தையுடையவன் எவனோ அவனே ஆசையை யறுத்தவன், அவனே முக்தி சுகத்தை யடைதற்குரியவன். அந் நித்திய சுகத்தை அறிவுச் செல்வம் ஒன்றினாலன்றி வேறொன்றினால் அடைய முடியுமோ? முடியவே முடியாது.

"பத்திநெறி நிலைநின்று நவகண்டபூமிப்
பரப்பைவல மாகவந்தும்
பாவையிடை மூழ்கியும் நதிகளிடை மூழ்கியும்
பசிதாக மின்றியெழுநா
மத்தியிடை நின்றுமுதிர் சருகுபுனல் வாயுவினை
வன்பசி தனக்கடைத்தும்
மவுனத் திருந்துமுயர் மலைநுழை தனிற்புக்கு
மன்னுதச நாடிமுற்றுஞ்
சுத்திசெய் தும்மூல பிராணனோ டங்கியைச்
சோமவட் டத்தடைத்துஞ்
சொல்லரிய வமுதுண்டு மற்பவுடல் கற்பங்க
டோறுநிலை நிற்கவீறு
சித்திசெய் துஞ் ஞான மலதுகதி கூடுமோ
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா நந்தகுருவே."

என்ற பெரியோர் வாக்கியம் இங்குக் கவனிக்கத்தக்கது.

ஆதலின், அவ்வறிவுச் செல்வந்தான் ஆசையை யறுக்க வல்லது; அவ்வறிவுச் செல்வந்தான் அழியாத பேரின்பத்தை யளிக்க வல்லது. அதைத்தான் அகண்ட ஞானமென்றும் சிவ ஞானமென்றும் பிரம்ம ஞானமென்றும் பெரியோர் கூறுவர். அவாவை யறுத்து அழியாத பேரின்பத்தை யளிக்கவல்ல அப் பேரறிவுப் பெருஞ் செல்வத்தைத்தான் நாம் பெறுதல் வேண்டும்.

அச் செல்வம் நமக் கெப்படிக் கிடைக்கும்? சின்னாட் பல்பிணிச் சிற்றறிவுடைய நாமே அச் செல்வத்தைத் தேடிக் கொள்ள முடியுமா? முடியாது. அருட் கடலாகிய இறைவன் திருவருளினாலேயே அச் செல்வம் நமக்குக் கிடைக்கக்கூடியது. அவ் விறைவன் திருவருளைப் பெறுதற்கு நாம் என்னசெய்தல் வேண்டும்? அக்கடவுளிடத்து அசஞ்சல பக்தி செய்தல்வேண்டும். "பச்சிலை யிடினும் பத்தர்க் கிரங்கி முத்திகொடுக்கும் மூவா முதல்வன்" அவ் விறைவனே யாவன்.

ஆகையினால் அன்பர்களே! உலகப் பொருட்கண்மீதுள்ள ஆசை யனைத்தும் ஒழித்து, பத்தி வலையிற் படுபவனாகிய இறைவன்மாட்டு உண்மையான அன்பு செலுத்தி, அவனது திருவருளால், சிவஞானச் செழுந்திருவை, பிரம்ம ஞானப் பெருஞ் செல்வத்தை, அகண்ட ஞான ஐசுவரியத்தைக் குறைவறப்பெற்று, எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாமல் விளங்குகின்ற பேரின்பத்தை, பிரம்மாநந்தத்தை, சிதாநந்தத்தை, சிவாநந்தத்தை, அத்துவிதாநந்தத்தை, அரிய பெரிய மக்கட் பிறப்பைப் பெற்றுள்ள நாம் அனைவரும் அடைந்துய்ய வேண்டுமென்பது அடியேனது வேண்டுகோள். சுபம்.

பத்திராதிபர்.

---

## திருக்காஞ்சிக் கல்வெட்டு.

திருக்காஞ்சி என்பது வில்லியநல்லூருக்குத் தென்கிழக்கில் ஆற்றின் தென்கரையில் உள்ள ஒரு சிறு ஊர். அவ்வூரின் சிவாலயம் ஆற்றின் கரையில் இருந்தமையால் அழிந்துபோயிற்று. ஆயினும் வேறொரு புது ஆலயம் கட்டப்பட்டிருக்கின்றது. ஆங்கு, கண்டமங்கலத்திற்கு 3 மைலில் உள்ளதும், முற்காலத்தில் 6 மைல் அகல நீளமுள்ளதும், திருவாண்டார் கோயில் முதலிய ஊர்களைத் தன்னுள் கொண்டுள்ளதும், வடகிழக்கில் ராஜராஜேசுவரம் என்கிற சிவாலயத்தையும் தென்கிழக்கில் திருவையாறுடை நாயனார் கோயிலையும் (திருவாண்டார் சிவன் கோயில்) ஊர் நடுவில் ஒரு பெரிய சித்திர மண்டபத்தையும் ஸ்ரீ கோயிலான ஸ்ரீ வீர நாராயண விண்ணகராழ்வார் கோயிலையும் ஊர்ப் பிடாரியாரான ஓங்கார சுந்தரியார் கோயிலையும் கொண்டுள்ளதும், அவ்வூர்ப் பராந்தகசோழன் காலத்திற்கு முன்பு மேம்பாடுடையதும், பொற்கோயில் தொண்டமான் காலத்தில் எடுப்பிக்கப்பட்டதுமான பல கட்டடங்கள் அமையப்பெற்றதுமாகிய வீராவதார வளநாட்டுத் தனியூரும் பிரமதேயமுமான திருபுவனமென்று இப்பொழுது வழங்குகின்ற திரிப்புவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்து வீரநாராயணப் பேரேரியைக் குலோத்துங்க சோழன் காலத்தில் கற்படைக் கருங்கல்லால் கட்டியதைப்பற்றி எழுதியுள்ள கல்வெட்டு நடுகல் ஒன்று எப்போழ்தோ இக் கோயிலில் கொண்டுவந்ததாகத் தோற்றுகின்றது. அக் கல்வெட்டு ஷை கல்லின் மூன்று பக்கமும் எழுதியுள்ளது.

### கல்வெட்டு.

சுவஸ்தி ஸ்ரீ வீரமே துணையாகவும் தியாக மெய் அணியாகவும் செங்கோலோச்சிக் கருங்கலி கடிந்து புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர்மகள் புணர உரிமையிற் சிறநத மணிமுடி சூடி மீனவர் நிலைகெட வில்லவர் குலைதர ஏனை மன்னவர் இரியலுற்றிழிதர திககனைத்தும் தந் சக்கர நடாத்தி வீர ஸிம்ஹாஸனத்து அவனி முழுதுடையாளொடு வீற்றிருந்தருளிய கோவிராஜ கேஸரி வனமரான திரிபபுவனச சக்கரவத்திகள் ஸ்ரீ குலோத்துஙக சோழ தேவற்கு யாணடு ௪௰ தாவது திரிபுவன மாதேவிச் சருப்பேதி மங்கலத்து யேரி நிறையேரியிலே பெருங்காற்றடித்துககுலை யிழிந்து கெட்டமையில் இக்கரையும் அட்டுவித்துககுலோத்துங்க சோழநென்று திருநாமத்தால் கற்படையுஞ் செய்து இததன்மம் சந்திராதித்த வறநிற்கச் செய்தான் பூதமங்கல

முடையான் ஒறறியூரன் பூபால சுநதர நான சோழகோனார் இவற்காக இக்கற்படை செய்வித்தாந் ராஜேந்திர சோழவளநாட்டு இடையளநாட்டுச் செல்கலூருடையானான மலையப்பிராஜன் இத்தன்மம் மஹா ஸபை யார் ரக்ஷை.

மறுபக்கம்

ஸ்வஸ்திஸ்ரீ சோழகோனார் க்டைய்ப்பித்தபடி யாண்டு ௪௰௪ கங்கைகொண்ட சோழ வளநாட்டு வீராவதார வளநாட்டுத் திரிபுவன மாதேவிச் சருப்பேதி மங்கலதது ஸபையார் காணப் பணிக்கச் சோழ கோந் அறிவித்ததாவது தங்களூர் ஸ்ரீ வீர நாராயணப் பேரேரிககுமுங்பு ஏரிமா விறையாய் வருகிற நெல்லு ஊரொட்டிலும் வரிமுதலிலுங்கூடி கற்படையின்றியே நிறை ஏரியிலே பெருங்காற்றடித்து கரை யழிந்து கெட்டமையில் இவ்வேரி குலோத்துங்க சோழங் கற்படையுஞ் செயது மண் கல்விக் கரை யட்டுகைககும் ஏரிமா விறைகருச் சிலவாக நில நிம நதமாக விடுகவென்று திருவாய் மொழிந்தருளினமையில் தங்களூர்ப் பிடாகை நெட்டைபாக்கமாந பூபால சுந்தர நல்லூர் மதுராந்தக வதிககு மேற்கு வீர நாராயண வாய்ககாலுககுத் தெற்கும் முஞ்சியாற்றுககு வடக்கும் ராஜகேஸரி வதிக்கு கிழக்கும் வடககில் இரண்டாறு திக்கு தெற் கும் வடக்கு இவ்வூர்க்கு உடலான நிலமும் நடுவுபட்ட நீர் நிலமும் கொல்லை நிலமும் இவ்விரண் டேரிலும் நீர் நிலத்தாலும் கொல்லை நிலத் தாலும் வந்த கடமை ஊரொட்டிலும் வரிமுதலிலும் தவிர்த்து குலோத் துங்க சோழன் கல்படையும் செய்து மண் கல்விக் கரை யட்டுகைக்கும் உடலாக விட்டேன் தாஙகளும் இபபடி விடடு நடுவிற் கோயிலிலும் ஏரியிற் கற்படையிலும் கல்லும் வெட்டி இத்தன்மம் சந்திராதித்த வற செல்லப் பணணுக இது சோழகோன எழுதது இவை புரவு வரி திண்ணைக்களநாயகம் விளக்கொளி மஙகலமுடையான் உத்தமன் உய்ய நின்றாடினான் எழுதது ஓலை எழுதும் அழகிய சோழ மூவேந்த வேளான் எழுத்து

**திரு. சுப்பிரமணிய தேசிகர்,**
சிலாசாசன பரிசோதகர்,
காஞ்சீபுரம்.

---

# தருணீமணி.

2-வது அத்தியாயம்.

(வெண்டாமரை ௩., 117-ம் பக்கத் தொடர்ச்சி.)

## தருணீமணியின் தயாள குணம்.

சென்றவத்தியாயத்தில் சாற்றிய சம்பவங்கள் நிகழ்ந்து ஓர் மாத காலம் ஆகியது.

ஆதிவாரம். பொழுதுவிடிய ஒரு யாமகாலம் இருக்கும். தேவ நாயகனின் குடிசையினுள் ஓர் மண் விளக்கு மங்கலாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. வருவோர் போவோர் யாவரும் "இன்று செய்யவேண் டிய கொலை நிமித்தம் தேவன் சித்தம் செய்துகொண்டிருக்கிறான்" என்று தங்களுக்குள் முணுமுணுத்துச் சென்றனர்.

ஆம் அப்படியே.

தேவநாயகன் பொழுது விடிவதற்கு ஓர் யாமகாலம் முன்னதாகவே துயில் நீத்துத் தன் படுக்கைவிட் டெழுந்திருந்து நாம் மேற்சொல் லிய மண் விளக்கைக் கையிலெடுத்துத் தன் மகன் கூனனை எழுப்பச் சென்றனன்.

"ஏ கூனு! — எழுந்திரு! —" என்று காலா லுதைத்துத் தன் தனயனை யெழுப்பினான். என்ன அன்பு! தகப்பனுக்குத் தன் தனயன் மீதிருந்த வாத்ஸல்யம் என்னே! குரூபிகளாயினும் குணவீனராயினும் ஏனையோர் தம் மக்களை எத்துணையோ செல்வத்துடன் வளர்க்க, இவன் தான் பெற்றெடுத்த தனயனைக் காலா லுதைக்கின்றானே! இதற்குக் காரணம் யாது? எல்லாம் தரித்திரமேயாம். ஈதறியாமலா நம் பெரி யோர்,

"தரித்திர மிக்க வனப்பினை யொடுக்கிச் சரீரத்தை யுலர்தர வாட்டும்
தரித்திர மளவாச் சோம்பலை யெழுப்புஞ் சாற்றரு முலோபத்தை மிகுக்கும்
தரித்திரந் தலைவன் றலைவியர்க் கிடையே தடுப்பருங் கலாம்பல விளைக்கும்
தரித்திர மவமா னம்பொய்பே ராசைதருமிதிற் கொடியதொன் றிலையே."

என்று கூறியுள்ளார்கள்.

அர்த்தமில்லாத புருஷன் அரசிகனென்றும், தன சம்பத்துடைய வரே மிக்க ரசிக சிரோமணிகள் என்றும் பலரும் சாற்றக் கேள்வியுற்

றிருக்கின்றோ மல்லவா? பணமில்லாத புருஷன் பிணத்திற்கே சமானமாவான் — நடைப் பிணமே யாவன்.

நிற்க, வெளியில் எங்கும் அந்தகாரம். ககனம் முழுதும் காரிருள் கவிந்து நின்றது. வீட்டைப் பார்க்கவே ஓர்வித பயம் உண்டாயிற்று. அதிலும் உட்புறத்திலிருந்த தேவநாயகனது அறையோ முன்னிலும் பீதியை விளைத்தது. விளக்கு வெளிச்சத்தில் விளங்கிய சித்திரங்கள் முன்னிலும் விகாரத்துடன் விளங்கின. தூலத்தினின்றுந் தொங்கிய தூக்கிடப்பட்ட மனிதன் தோற்றம் முன்னிலும் கோரமுற்றது. தேவன் மனமோ இதனாற் சிறிதும் கலக்கம் உறவில்லை. பழகப் பழகப் படை கலக்கும் பணாமணி நாகமும் பாம்பாட்டியின் பேழையுள் அடக்கமாம் அன்றோ? கோரமான அவன் கொலைத்தொழில் கருணாவர்ஜிதமான அவன் மனத்தினைக் கல்லினுங் கடியதாகச் செய்துவிட்டது.

தன் மகன் துயின்றெழுந்து வருமளவும் தேவநாயகன் அங்குமிங்கும் உலவி நின்றனன். சில நிமிஷங்கள் சென்றதும் கூனனும் உள்வந்து சேர்ந்தான். சுருங்கிய அவன் வதனம் சற்றே தன் பொலிவிழந்து கலக்கத்துடன் தோன்றியது. முகம் வியர்த்தது. கை கால்கள் நடுங்கின. நியாயாதிபதி முன் தோன்றும் கைதிபோலக் கைகட்டி வாய் புதைத்து, கண்களினின்றும் வீழ்நீர் பெருகத் தன் தந்தை முன் வந்து நின்றான்.

"நீ கற்ற வேலைத்திறனைக் காட்டவேண்டும்" என்றான் தேவன் தன் புதல்வனை நோக்கி.

"இன்றா? —" கூனன் கண்ணீர் ததும்பத் தன் கரங் கலங்க "இன்றா? —" எனக் கலங்கிக் கழறினன்.

"ஆம் இன்றுதான். நேற்றே நான் உனக்குச் சொல்லவில்லையா? என் நடுங்குகிறாய்? — நடுக்கத்தை நீக்குவேன் நான்—ம்" என்று கூறித் தனது கையிலிருந்த சாட்டையினால் இரு பிரகாரங்கள் கொடுத்தலும், கூனன், "ஐயோ நாயனா! வேண்டா! — சொற்படி நடப்பேன்! — சாட்டியடி வேண்டா!" எனக் கதறி யுரைத்தனன்.

"ம—ம—இப்பொழுது சரி! சொற்படி கேட்டலல்லவோ சுதரின் சற்குணம். உன்னை யடிப்பதில் எனக்கென்ன பிரயோஜனம்? சந்தோஷமா? அல்லது விளையாட்டா? உன் நலம் கருதியே உதைகள் உனக்குக் கொடுக்கிறேன். என்? அடி உதவுவதுபோ லண்ணன் தம்பி யுதவுவார்களோ? உன்னைப் பிழைப்பிக்கத்தான் இதெல்லாம். என்னைப்

போ லுத்தியோகத்தில் அமர்ந்தால் எவ்வளவு சம்பாதிக்கலாம் என்பதை எண்ணிப் பார். என்னை யல்லாது தர்ம பரிபாலனம் சரிவர நடந்தேறுமா? அதோடுகூட என்ன — எனக்கும் நியாயாதிபதிக்கும் — எனக்கும் அரசர்க்கும் — என்ன வித்தியாசம்? அவர்கள் ஒருவனைத் தூக்கிலிட வேண்டும் என்றோ அல்லது கொல்லவேண்டும் என்றோ தீர்மானஞ் செய்கிறார்கள். நான் அதை நிறைவேற்றுகிறேன். வேலையில் எல்லாம் சரிதான்! எது உயர்ந்தது? எது தாழ்ந்தது? — அதோடு கீதையிலும் "தன் தொழில் எவ்வளவு நீசமாய் இருந்தாலும் அதை விட்டு வேறு தொழிலை யாசிரயிப்பவன் அதனால் நற்கதி அடையமாட்டான்" என்று பகவான் சொல்லவில்லையா? நீ பிறந்த வேலை இது —" எனப் பல்வேறு விதமாகப் புகழப் புகுந்தனன் தேவநாயகன்.

"அப்பா! உங்கள் வேலை உயர்ந்ததுதான் —"

"வேலையாவதடா? — உத்தியோகம் என்று சொல் — கண்ணிய மாய் இருக்கும் — போ! அந்த உருவத்தைக் கட்டிப் பழகு. பழகப் பழக எல்லாம் பால் குடிப்பதுபோலாம்" எனப் புரோத்சாகம் செய்தான் தேவன்.

"நான் இன்று தொழில் பழகவேண்டுமோ —" கூனன் குழறினான்.

"வேண்டுமோ? — கரும்பு தின்னக் கூலியா? தொழில் பழக அவ காசம் கிடைத்ததே என்று சந்தோஷிக்காமல் "வேண்டுமோ?" என்கி றாயே மடையா! கொலைசெய்வது எதற்கு? தர்ம பரிபாலனத்திற்காக அல்லவா? கடவுளின் கடன் பக்தரைப் போஷிப்பதும் துஷ்டரைச் சிக்ஷித்தலும். நாம் அதை நிறைவேற்றுவதில் கடவுளின் காரியத்தைக் கைம்மேற் கொள்கிறோம். இதில் என்ன ஈனம்? பகவானும் கீதையில், "எந்த மனிதனும் தன் தொழிலைச் செய்வதால் மாத்திரம் முக்தி யடை கிறான், தன் ஜாதித் தொழிலை யனுசரித்துக் கடவுளை வழிபடுவதாலேயே மோக்ஷம் அடைகிறான், தன் ஜாதித் தொழில் ஈனமாயினும் எத்துணைப் பாதகம் பயப்பதாயினும் பாபம் அடையான்" என்று சொல்லவில்லையா? கொலைத் தொழில் பாதகமற்றது" எனப் புகழ்ந்தான் தேவன். தன் கைச் சாட்டையாலும் பின்னும் பிரகாரங்கள் கொடுத்தான் தன் வாக்கியங்களை உறுதிப்படுத்த.

கீதா வசனம் முதலிய நியாயங்களுக் கிணங்காவிடினும் கூனன் தேவனின் தடியடி நியாயத்திற்குப் பயந்து இணக்கமுற்றதுபோல் நடித் தனன். தேவனும் இதனைக் கண்டதும் சந்தோஷங்கொண்டு தன் போதனை முறையைப்பற்றிச் சிலாகிக்கலாயினன்.

"ஆ! ஒரு சின்ன சாட்டையில் இருக்கும் மகிமை என்னென்று சொல்ல! தடியடிப் பயம், ரௌரவாதி நரகம் முதலியவையில்லாவிட்டால் யார்தான் கடவுளுக்குப் பயப்படுவார்? வேலையில் சேர்ந்துவிட்டாலோ பார்! எவ்வளவு வெகுமானம்! எவ்வளவு மரியாதை! —" என்றிவ்வாறு தேவன் தன் பெருமை பாராட்டு மளவில், "தேவா!" என்னு மொலி தொனித்தது.

"மாகானு! உள் வா! —" என்றான் தேவன்.

"தேவா! இன்றைக்கு வேலை! —" என்று சொல்லிக்கொண்டே ஒருவன் உள் வந்தான்.

வந்தவன் சிறிதுநேரம் தேவனோடு அநேக விஷயங்களைப்பற்றிப் பேசிய பின்னர், கூனனைப்பற்றி விசாரிக்கலாயினன்.

"கூனன் மட்டும் வேலையில் கைதேர்ந்துவிட்டால் நம் குலத்திற்கே பெருமைதான்" என்றான் வந்தவன்.

உடனே தேவன் தன் பிரசங்கத்தைத் தொடங்கினான். "வேலையென்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்!" என்றான்.

இதுகாறும் மௌனஞ் சாதித்த கூனன் கடைசியாகப் பொறுமையை யிழந்து "நயினா! நம்மை யார் மதிக்கிறார்கள்? நாம் மனிதர் தான் என்று மதிக்கும் மானிடரும் உண்டா? வீணாகச் சொல்வதில் என்ன? நாம் தொட்டால் அது தீட்டென்றும், நாம் அருகிற் சென்றால் பாபம் நேருமென்றும் அஞ்சி ஒடுகின்றனர் ஆன்றோர். நீங்கள் எங்காவது போவதுண்டா? அல்லது யாரேனும் நீங்கள் வரவில்லையே என்று வருந்தி யழைத்ததுண்டா? நான் வெளிக்கிளம்பினால் தெருவிற் றிரியும் இரந்துண்ணிகள் கூட "அதோ! கூனன் பார்! கொலைக்காரன் பார்!" என்று சொல்லிச் சுட்டிக்காட்டிப் பரிகசிக்கின்றனர். ஏனையோர் என்னைக் கண்டு முகத்தைச் சுளித்துக்கொண்டு செல்கின்றனர். — நான் என்ன சண்டாளனா? பறையனா? குலத்தினுட் சிறந்த வேளாளர் மரபினுள் உதித்தவனல்லனோ? நமக் கடுத்ததா இத் தொழில்? ஏதோ கஷ்ட காலத்தில் விதிவசத்தால் வேறு கதியில்லாது இக்கோலம் பூண்டோம். ஆகவே சீக்கிரம் விட்டுவிடுவதே தகுதி — இது மிகவும் பாபகரமான தொழில்—நமக்கு வேண்டா. கொலைத் தொழில் கைக்கொண்டு பாதகம் புரிந்து வயிறு வளர்ப்பதைக்காட்டிலும் உயிர் துறப்பதே நலம், பிக்ஷாடனம் செய்தல் பெரும் பாக்கியம் ஆம்" என்று கடுத்துக் கூறினன்.

46



தேவன் இப்படிப்பட்ட பிரசங்கம் என்றும் கேட்டதே இல்லை. ஸ்தம்பிதனானான், கடவுளே கண்முன் நின்று கொலைத் தொழிலின் கொடுமையைப்பற்றி இடித்துரைத்ததுபோல் நினைத்து உள்ளம் உருகினான். பெருங் காற்று ஒன்று அச்சமயத்தில் வந்து 'ஓ'வென்று பெருஞ் சப்தத்துடன் கதவுகளின்மீது மோதி, 'படபட'வென்று பெரு முழக்கம் உண்டுபண்ணிற்று. ஆகாயத்தில் திடீரெனப் பேரிடி யிடித்தது. தேவனது கன்மனம் கரைந்தது. தன் கொலைத் தொழிலின் பாதகத்தைப் பற்றிச் சிந்திக்கலுற்றான். ஓங்கிய கைத்தடியும் கூனன்மீது விழவில்லை. 'கழுதை' — என்று மாத்திரம் திட்டினான்

(தொடரும்.)

**R. வாசுதேவ சர்மா.**

---

## திருக்குடந்தைக் காரோண வாராய்ச்சி.

(வெண்டாமரை ௩, 124-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி, பெரிய புராணத்தையுஞ் சிறிது ஆராய்ச்சி செய்வேன். தூக்கு சீர்த்திருத்தொண்டத் தொகைவிரி வாக்கினால் சொல வல்லபிரானும், எங்கள் பாக்கியப் பயனாய்க் குன்றைப்பதி வாழ்பவரும், பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி சிரேஷ்டரும், சோழனவைக் களத்து முதன் மந்திரித் தொழின்மை பூண்டவருமாகிய நம் **சேக்கிழார் சுவாமிகள்,** நம் நாட்டிலுள்ள சிவஸ்தலங்களின் பெயரும் அவ் வாலயங்களி லெழுந்தருளி யிருக்கும் நம் பெருமானின் திருநாமங்கள் முற்றுந் தெரிந்தவர்கள் ஆனபடியால், நாம் மேலே கூறியுள்ள திருக்குடந்தைப் புராணக் கொள்கைகட் கேற்ப, நந் திருத்தொண்டர் புராணத்துள் திருவாய் மலர்ந்துள்ளார்கள். அப் புராணச்செய்யுளை அப்படியே வரைகின்றனன்.

திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் புராணம்.

போற்றிசைத்துப் புனிதாருள் பெற்றுப்போந் தெவ்வுயிருந்
தோற்றுவித்த வயன்போற்றுந் தோணிபுரத் தந்தணனா
ரேற்றுமிசை யேற்றுகந்த விறைவர்தமை யேத்துதற்கு
நாற்றிசையோர் பரவுதிருக் குடமூக்கு நண்ணினார்.

தேமருவு மலர்ச்சோலைத் திருக்குடமூக் கினிற்செல்வ
மாமறையோர் பூந்தராய் வள்ளலார் வந்தருளத்
தூமறையி னொலிபெருகத் தூரியமங் கலமுழங்கக்
கோமுறைமை யெதிர்கொண்டு தம்பதியுட் கொடுபுக்கார்.

திருஞான சம்பந்தர் திருக்குடமூக் கினைச்சேர
வருவார்தம் பெருமானை வண்டமிழின் றிருப்பதிக
முருகாநின் றுளமகிழக் குடமூக்கை யிடந்திருந்த
பெருமானெம் மிறையென்று பெருகிசையாற் பரவினார்.

வந்தணைந்து திருக்கீழ்க்கோட் டத்திருந்த வான்பொருளைச்
சிந்தைமகிழ் வுறவணங்கித் திருத்தொண்ட ருடன்செல்வா
ரந்தணர்கள் புடைசூழ்ந்து போற்றிசைப்ப வவரோடுங்
கந்தமலர்ப் பொழில்சூழ்ந்த காரோணஞ் சென்றடைந்தார்.

பூமருவுங் கங்கைமுதற் புனிதமாம் பெருந்தீர்த்த
மாமகந்தா னாடுதற்கு வந்துவழி படுங்கோயி
றாமருவு மலர்க்கையாற் றொழுதுவலங் கொண்டணைந்து
காமர்கெட நுதல்விழித்தார் கழல்பணிந்து கண்களித்தார்.

கண்ணாரு மருமணியைக் காரோணத் தாரமுதை
நண்ணாதார் புரமெரித்த நான்மறையின் பொருளானைப்
பண்ணார்ந்த திருப்பதிகம் பணிந்தேத்திப் பிறபதியு
மெண்ணார்ந்த சீரடியா ருடன்பணிவுற் றெழுந்தருளி.

பின்பு காழிவள்ளல் திருநாகேசுவரம் தரிசிக்கச் சென்றனர் என்று கூறியுளது. "பூமருவு கங்கை" என்ற தலைப்பினையுடைய செய்யுளில், காரோணநாதர் என்பவர் கங்கை முதலாக உள்ள கன்னியர்களால் பூசிக்கப்பெற்றவர் என்ற விடயம் ஸ்தலபுராணக் கொள்கைக்கு ஒற்றுமையா யிருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது. இனித் திருக்குடந்தையிலுள்ள மூன்று மூன்று பாடல்பெற்ற ஸ்தலங்களின் அமைப்பைப் பற்றியு மாராய்வோம். திருக்குட மூக்கு என்பது மேற்கே உள்ளது. திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் என்பது கிழக்கே உள்ளது. சோமேசர் ஆலயம் என்பது இவ் விரண்டு ஸ்தலங்களுக்கும் மத்தியிலுள்ளது. திருக்குடந்தைக் கீழ்க்கோட்டத்துக்குச் சற்றுக் கீழ்பாலிலுள்ளது திருக்குடந்தைக் காரோணம். (விசுவேசர் ஆலயம்) திருஞானசம்பந்த சுவாமிகள் திருக்குட மூக்கினைப் போற்றி, கீழ்க்கோட்டஞ் சார்ந்து பிறகு காரோணஞ் சென்றனர் என்று பெரிய புராணம் கூறுவதினால், காரோ

148



ணம் என்ற ஸ்தலம் விசுவேச ராலயத்துக்குத்தான் என்பதும் பெற்றும். இனி, திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர் தேவாரத்தில், திருக்குடந்தைக் காரோணப் பதிகத்தில் இரண்டாவது செய்யுளாகிய,

முடியார்மன்னர் மடமான்விழியர் மூவுலகுமேத்தும்
படியார்பவள வாயார்பலரும் பணிந்தேத்தக்
கொடியார்விடையார் மாடவீதிக்குடந்தைக் குழகாருங்
கடியார்சோலைக் கலவமயிலார் காரோணத்தாரே.

இது சற்றுக் கவனிக்கத்தக்கது. புராணத்துட் கூறியபடி காரோணநாதர் ஓர் அரசனுலும் பவளவாயார் பலராலும் பூசிக்கப்பெற்ற வர் என்ற வொற்றுமை சிறந்த ஆதாரம். இதுகாறும் கூறிப்போந்த தினல் காரோணநாதர் என்பது விசுவநாத சுவாமிக்கே உரிய நாமம் என்பது நாம் பெற்ற துணிவு. நாம் எடுத்துக்கொண்ட ஆன்ரோர் வாக்கியங்கள் ஒன்றற்கொன்று முரண்படாதிருத்தல் பாராட்டற்பாலது. ஆனபடியால் ஷை சோமேசர் ஆலயத்துக்குக் காரோணம் என்று சொல் வது தவறு.

சில தேவாரத் திருமுறையில் திருக்குடந்தைக் காரோணப் பதிகத்தினடியில், சுவாமி பெயர் சோமநாதர், அம்மை திருநாமம்—தேனர் மொழியம்மை என்று வரையப்பட்டுள்ளது. திருக்குடந்தைப் புராணத் துள் சோமேசப் படலத்தினுல், அப் பெருமான் பக்கல் எழுந்தருளி யிருக்கும் அம்மையின் திருநாமம் சோமசுந்தரி என்று தெரியவருகிறது. தேனர் மொழியம்மை என்று காணப்படவில்லை. சோமநாதர் பாகத் திறைவியை எதுகாரணம் பற்றித் தேனர் மொழியம்மை யென்று சொன்னர்களோ தெரியவில்லை. காரோணநாதர் ஸ்ரீ விசுவேசர் என்பது பசுமரத்தாணிபோல யாவருந் தெரிந்துகொள்ளலாம்.

முன்னுபுகழ்ச் சோனுடு வாழ்கதிருக் குடந்தையெனு மூதூர் வாழ்க
மன்னுபெருஞ் சைவமிக வாழ்கவிடை மருதர்முதல் வானேர் வாழ்க
பன்னுதிரு மங்களநா யகிவாழ்க கும்பேசர் பண்பு வாழ்க
மின்னுதிரு வம்பலத்து ளவெடுத்த குஞ்சிதத்தாள் மேன்மேல் வாழ்க.

ப. தி. சோ. குமாரசாமி,
கும்பகோணம்.

---

அரசன் — இராமன். பவளவாயார் — நவகன்னியர்கள்.

# இலக்கியப் பகுதி.

## சீவக சிந்தாமணி.

### ௨. காந்தருவ தத்தையா ரிலம்பகம்.

(வெண்டாமரை ௨, 130-ம் பக்கத் தொடர்ச்சி.)

கோதை முத்தணிந்த மார்பன் சீவகன், தாதை கந்துக்கடன் சொன்ன காரியங்களையும், ஓலை கொண்டுவந்தவள் சொன்னவற்றையும், தன் உயிர்த் தோழனாகிய புத்திசேனன் சொல்லக் கேட்டு, கூரெயி றிலங்க நக்கு, "அவ்விடத்து நமக்கு வருவது ஒரு தீமை சிறிதுமில்லை, போகக்கடவோம்" என்ற வளவிலே, தோழர் அதற்கு உடன்பட்டு, போர்க்குச் செல்கின்ற புலித் திரள்போலே சீவகனைச் சூழ்ந்து திரண்டனர். கண்ணுதற் கடவுள் சீறக் கனலெரிதுளித்த காமன் மண்மிசைத் தோன்றியன்ன வகைநல முடையகாளை சீவகன், மற்றைத் தோழரோடும், இயற்கை யழகோடு செயற்கை யழகும் அமைய ஆடை யணிகளால் அலங்கரித்துக்கொண்டு, அஞ்சனக்குன்ற மன்னதோர் யானையின் மீதேறி, நால்வகைப் படையும் புடைசூழப் புறப்பட்டுப்போய், "காந்தருவதத்தை இனி இக்காளைக்குத் தோற்றனள்" என்றும், "இவன் இன்பம் நுகர்தற்கு இவள் நோற்றனள்" என்றும், கோற்றொடி மகளிர் எற்றன சொல்லி எங்கணும் நிற்கவும், கடும்பகை யறுத கட்டியங்காரன் எரிந்து பார்த்து இரும்பூதெய்தவும், வீணை வாசிக்கின்ற மண்டபத்தை யடைந்து, அவ்விடத்தே புதிதாக இடப்பட்ட அணையின்மேற் பொலிவு பெற்றிருந்தனன்.

வீங்கிய காமம் வென்றார் விளைத்த வின்பத்தோ டொப்பாள் தத்தை, சீவகனைக் கண்ணுற்று, "பெருவனப் புடையநம்பி, என்னை இவ் வருத்தத்திலே யகப்படுத்தின பெரியோன், இவன் தேவனோ! மனிதனோ! யாவனோ!" என ஐயுற்று, "யாவனாயினு மாகுக, நமது ஞானக் கண்ணென்கிற வலையினிடத்துள்ளே யிருந்தான்; அதனால் யான் நோக்கின விடத்துக் கைக்குட்பட்டே யிருந்தான்; இக் காளையினது மார்பைச் சேர்தற்காகும் நல்வினை எந்நாளிலே யுண்டாவதோ" என்றையுற்று நோக்கி, அக்காலம் சிறிது நீட்டித்தலாலே அதற்கு ஆற்றாமல்,

45. குட்டநீர்க் குவளை யெல்லாங் கூடிமுன் னிற்ற லாற்றாக்
கட்டழ குடைய கண்ணா ணிறையெனுஞ் சிறையைக் கைபோ
யிட்டநாண் வேலி யுந்திக் கடலென வெழுந்த வேட்கை
விட்டெரி கொளுவ நின்றா ளெரியுறு மெழுகி னின்றாள்.

அங்ஙனம் துன்புற்றுத் தன் மனத்தில் நின்ற தலைவனை நோக்கி, “காவலாகிய நிறையென்னும் கதவை நீக்கி என் நெஞ்சமென்னும் கன்னிமாடம் புகுந்து யான் வருந்தும்படி யென் மனத்தைப் பிடித்துக் கட்டினாய், மாலையாலே நின்னையும் பிடித்துக் கட்டுவேன், சிறிது பொழுது கழிக” என்றாள். என்றவள் தன் நெஞ்சினை நோக்கி, “நெஞ்சே! இந் நம்பி, தீங்கரும் பெருந்திற் றூங்கி யீயின்றி யிருந்த தீந்தேன் ஆதலால் பூந்துழை மகளிர் முன்னார்ப் புலம்பாதொழிக” என்று ஆற்றுவித்துத் தேற்றி, பின்பு தோழியை நோக்கி, “இவ் வழகனுக்கு, இனிய வீணை இது; ஆயினும் இதனை, அவன் கல்வியை யறிதற்குப் பல வீணையையும் செலுத்திப் பின்பு கொடுப்பாயாக” என்றாள்.

தத்தையினது ஏவலாலே வீணாபதி யென்னும் அத் தோழியானவள், அவ் வீணை ஒன்றினையும் நீக்கிவைத்து ஒழிந்த வீணைகளைச் செலுத்திக் கொடுத்தாள். அப்பொழுது மடங்கலன்ன மோய்ம்பினான் சீவகனும் அவற்றைக் கைக்கொண்டு தனது பரந்துகிடந்த ஞானத்தினளவை அறிவிக்கலுற்று நோக்கினான்; நோக்கி, பசும்பொன்னாற் கவசமிட்ட அவ் வீணைகளின் நரம்புகளைத் தேனார்த்தெனத் தெறித்து அவற்றின் இசையாலே அவள் வீணைகளின் பொல்லாமை இதுவென்று வீணாபதியை நோக்கி விளம்பலுற்றான் :

“இம் மரம் நீரிலே நின்று மெல்கிற்று ஆதலால் இவ்வியாழ் வேண்டா; இந்த மரம் நீரில் அழுகினதாதலால் இவ் வீணை போக; இம் மரம் வாளால் புண்பட்டதாதலால் இது நடப்பதாக; இம் மரம் இடி விழப்பட்டதாதலால் இவ்வியாழ் ஒழிவதாக; சீர்சால்கணிகை சிறுவன்போல் நில மயங்கினவிடத்தே நிற்றலால் இம் மரம் சிறப்புடையதன்று ஆதலால் இவ் வீணை யொழிவதாக” என்றான். அங்ஙனம் கூறிப் பின்னும்,

---

45. ஆழமாகிய நீரினிடத்தேயுள்ள குவளை மலர்களெல்லாம் திரண்டு முன்னே வந்து நிற்கலாற்றாத மிகுந்த அழகுடைய கண்களையுடைய தத்தை, நிறையென்கின்ற சிறைச்சாலையைக் கடந்து நாணமாகிய இடப்பட்ட வேலியைப் பாய்ந்து கடல்போல அலைத்தெழுந்த காமமாகிய தீ கொழுந்து விட்டெரியும்படி நின்றாள்; அப்பொழுது தீயிற்பட்ட மெழுகுபோல உருகிநின்றாள்.

"கல்சேர் பூண்கோள் கதிர்முலேயாய்! இம் மரம், காமத் தீயால் வேந்தவர்போல் கோல்லே யுழவர் சுடப்பட்டுத் தாழ்ந்து வெந்தது; இம் மரம் யானே சேர்தலால் முரிந்தது" என்று ஒழிந்த வீணேகளேயும் போக்குதலால், புகையின் நிறமமைந்த பட்டாலாகிய உறையுள் உள்ள நல்ல வீணேயை, தோழி கைந்நீட்டிக் கொடுக்க, அதனே வாங்கிக்கொண்டு, நங்கை நலத்த திதுவென்றான். "மண்மகள் ஈனப்பட்ட மரம், விசும்பென்னும் செவிலித்தாய் மின்னுகிய பொன்னூரங்களேயுடைய முகிலாகிய முலேயின் மாரியாகிய இனிய பாலே முழுவ லன்போடு ஊட்ட உண்டு, வெயிலும் காற்றும் நீரும் நிழலும் மிகுதலாகிய நோய் நான்கும் நீங்கி, அரிய நிலத்தே அழகாய் வளர்ந்து வாளினலகால் அறுக்கப்பட்டு வந்தது இவ் வீணே" என்றான்.

சீவகன் நரம்பின் தீமையை நெடும்பொழுதெல்லாம் ஆராய்ந்து கூறி அதற்கேற்ப, தத்தை காணும்படி முறுக்கை யுடைத்து அதிற் கிடந்த மயிரை எடுத்துக்காட்டுதலினுல்அவையிலுள்ளவர்கள், "தேங்கமழோதி தத்தை இனிச் சீவகனுக்குத் தோற்றுவிட்டாள்" என்று கூறு நிற்க, அவன், தனக்குச் சேமமாக வந்தவற்றில், தன் தம்பி நபுலன் கையிலுள்ள நரம்பை மாத்திரம் வாங்கினுன், யாழ் நன்ருயிருத்தலின்.

46. குரல்குர லாகப் பண்ணிக் கோதைதாழ் குஞ்சி யான்றன்
விரல்கவர்ந் தெடுத்த கீத மிடறெனத் தெளித றேற்ருர்
சுரரொடு மக்கள் வீழ்ந்தார் சோர்ந்தன மாவும் புள்ளும்
உருகின மாமுங் கல்லு மோர்த்தெழீஇப் பாடு கின்ருன்.

சீவகன், விண்ணவர்கள் வியப்புறவும், வித்தியாதர குமரர்கள் விரும்பி யேத்தவும், மண்ணவர்கள் மகிழவும், வான்கண் உலவும் கின்னர மிதுனங்கள் மெய்ம்மறந்து சோரவும், மன்மதனும் நாணமுறவும் பாடினுன்; அது கேட்ட அரசரெல்லாம் பண்ணமைத் தெழுதப்பட்ட பாவைபோ லாயினரே.

---

46. மாலே தங்கிய மயிரினேயுடைய சீவகன், குரல் என்னுமிசையே இன்னிசையாகச் செம்பாலே யென்னும் பண்ணேப் பண்ணித் தனது விரலாலே யெழுப்பி யெடுத்த பாட்டைக் கண்டப் பாட்டென்று கருதி, கருவிப் பாட்டென்று தெளிதலே யறியாராய், தேவரும் மனிதரும் தம்முள்வாசியில்லாமல் வீழ்ந்தனர்; அசுணங்களும் கின்னர மிதுனங்களும் சோர்ந்தன; மரமும் கல்லும் உருகின; அங்ஙனம் வாசித்த நிலேயைக் குறித்து அதற்கேற்ப ஆளாபம் செய்து பாடுகின்ருன்.

அசுணமா – இசையறிவதோர் விலங்கு.

இளமயில்போ லிருந்தாளாகிய அத் தத்தை, "யாழையும் பாட்டையும் யான் தோற்றற்கு, பருந்தும் அதனிழலும்போல், பாட்டும் யாழ் வாசினையும் சீவகனுக்கே விருந்தாகச் சேர்ந்தன" என்று கருதி, யாழைப் பண்ணி வாசித்து மதுர கீதத்தில் அவனை யொத்திலளாய், கோதை புறந்தாழக் குண்டலமும் பொற்றேடும், காதினொளிர்ந் திலங்கக் காமர் நுதல் வியர்ப்ப, அழகிய பிடரை யிடதுபக்கத்தே வளைத்து அம் மதுர கீதத்தைப் பாடத் தொடங்கினாள்.

47. பிறையார் திருநுதலும் பேரமருண் கண்ணும்
பொறையார் வனமுலையும் பூம்பசலை மூழ்க
நிறைவா ளிலங்கருவி நீள்வரைமேன் மின்னும்
கறைவேலுண் கண்ணினாய் காணார்கொல் கேள்வர்.

அங்ஙனம் பாடத் தொடங்கினவள் பாடின பாட்டும் அதற்கேற்ற வீணையும் ஒருதிறமா யிருந்தன; அவன் பாடின பாட்டும் வீணையும் வேறோர் திறமாயிருந்தன. பின்பு உடனிகழ்ச்சியில் யாழைப் பண்ணி வாசித்தலைப் பொருந்தும் தத்தையினது மெல்லிய விரல்களும் அதற்கேற்கும் பாட்டுக்களும் நரம்புடன் இயன்று நடவாவாயின; பின்பு கருவி யொழிந்த கண்டப் பாட்டும் வெளியே நின்று இயங்கி அக்காலத்தே கம்பித்தலைச் செய்தலாலே வாதிற்கெடுத்த கீதத்திற் சிறிது குறைந்து காந்தருவதத்தை இசையில் தோல்வியடைந்தாள்.

மையார் நெடுங்கண்ணாள் பெண்ணரசி தத்தை, அங்ஙனம் வீணை தோற்றலால், "நமக்குத் தோல்வியுளதாயிற்று" என்று நைந்து நிலை தளர்ந்து, அவையிற் செல்லவேண்டுதலின் நாணம் மீதூர்தலால், மெய்யாகவே ஒரு குன்றை யெடுப்பாள்போல மெலிந்து, பொன்மாலையைச் சீவகனுக்கு இடுவதற்காக எந்தினாள்.

---

47. உதிரந்தோய்ந்த வேற்படைபோலும் மையுண்ட கண்களையுடையவளே! பிறைச் சந்திரனை யொத்த அழகிய நெற்றியும், பெரிய காமப்போரை விளைக்கின்ற மையுண்ட கண்களும், பாரமாகிய அழகிய தனங்களும், பொலிவினையுடைய பசலையிலே மூழ்கும்படி, ஒளி நிறைந்த வாள்போல் விளங்குகின்ற அருவி, பெரிய மலைமேலே மின்னும்; இதனைக் கேள்வர் காணாரோ!

இளவேனில் வருகின்றமை கண்டு ஆற்றாளாகிய தலைவி தோழிக்குரைத்தனவாகக் கூறினாள், வேட்கையுஞ் சிறிது புலப்பட்டு நிற்றலின்.

அருவி தெளிந்ததெனவே காலம் வேனிலாயிற்று.

153



48. மெல்லென் சிலம்பாற்ற மேகலைகண் மின்னுமிழ
நல்ல பெடையன்ன நாண வடியொதுங்கி
யொல்லென் னுயர்தவமே செய்ம்மி னுலகத்தீ
ரெல்லீரு மென்பாள்போ லேந்தன்மேல் வீழ்த்தனளே.

(வரும்.)

பத்திராதிபர்.

---

# சாத்திரப் பகுதி.

---

## சுவிவேக தர்ப்பணம்.

---

( ஸ்ரீ சாந்தாநந்த சரசுவதி சுவாமிகள்
ஆந்திர பாஷையில் அருளியது. )

( வெண்டாமரை ௩, 94-வது பக்கத் தொடர்ச்சி. )

ஜீவனாவது, அந்தக்கரணமும், அந்தக்கரணத்திற்கு அதிஷ்டான சைதன்னியமும், அந்தக்கரணத்தில் பிரதிபலித்த சிதாபாசமும், காய்ந்த இரும்புத் திரட்சியைப்போல ஒன்றாகக் கூடி ஸ்புரித்த அம்சமாகும். இம் மூன்றையும் சேர்க்காமல் அந்தக்கரணம் ஒன்றிற்கே ஜீவத்துவம் சொல்லக்கூடாதாவெனின், அதற்கு ஜீவத்துவம் உண்டாகும் பக்ஷத்தில், கடத்திற்குக் கூட ஜீவத்துவம் உண்டாகவேண்டிவரும். அப்படி யுண்டாகமாட்டாதாதலின், அந்தக்கரணத்திற்கு ஜீவத்துவம் நிரூபித்தல் கூடாது.

---

48. அங்ஙனமேந்தினவள், சிலம்பு மெல்லென ஒலிக்கவும், இடையணிகள் ஒளிவீசவும், அழகிய அன்னப்பெடை வெள்கவும், காலால் நடந்து சென்று, "உலகிலுள்ளீ ரெல்லீரும், ஒல்லென்னும் ஓசைபடப் புகழ்கின்ற உயர்ந்த தவத்தையே செய்யுங்கள்" என்று கூறுவாளைப் போல, சீவகன் கழுத்திலே அம் மாலையை யிட்டாள்.

குன்றென்றதற்கேற்ப வீழ்த்தனளென்றார். இங்ஙன மெய்து தற்குத் தவஞ்செய்யுங் கருத்து எல்லார்க்கும் இவள் பிறப்பித்தலின், என்பாள்போ லென்றார். ஒல்லென் – வெளியாக வென்றுமாம்.

கடம் சொச்ச வஸ்துவல்ல, ஆதலின் அதற்கு ஜீவத்துவம் சொல்லுதல் அயுக்தமாயினும், சொச்ச வஸ்துவான அந்தக்கரணத்திற்கு ஜீவத்துவம் ஏன் சொல்லக்கூடாது? என்றால், கண்ணாடிகள் சொச்ச திரவியங்களாதலின், அவற்றிற்குக் கூட ஜீவத்துவம் வரவேண்டியதாக முடியும். கண்ணாடிகள் பாகிய பதார்த்தங்களாதலின் அவற்றிற்கு ஜீவத்துவம் வாராமற் போயினும் போகலாமேயன்றி, அந்தர பதார்த்தமான அந்தக்கரணத்திற்கு ஏன் ஜீவத்துவம் வருதல் கூடாது? எனின், இந்திரியங்கள் அந்தரங்களே யாதலின், அவற்றிற்கும் ஜீவத்துவம் வரவேண்டியதாக முடியும். அப்படி வருதற் கிடமில்லை யாதலின், அந்தக்கரணத்திற்கு ஜீவத்துவம் வாராதென்பது நிச்சயமாகின்றது. இதன்றியும், ஜீவன் சேதனனாயும் அந்தக்கரணம் அசேதனமாயும் இருத்தலின், சேதனத்துவத்தில் அசேதனத்துவத்தை யாரோபணம் செய்வது யுக்தமல்ல.

அங்ஙனமாயின், கேவல பிரதிபிம்பத்திற்கு ஜீவத்துவம் சொல்லலாமேயெனின், அந்தக்கரணத்தை விட்டுப் பிரதிபிம்பம் வேறாக இராதாதலின், அதற்கு ஜீவத்துவம் சம்பவிக்காது. பிரதிபிம்ப நிமித்தமாக அந்தக்கரணத்தை யங்கீகரித்து, கேவல பிரதிபிம்பத்திற்கு ஜீவத்துவத்தை ஸ்திரப்படுத்தலாமென்றால், பிரதிபிம்பத்திற்கு ஸ்வயம் விகாரம் உண்டாயிருப்பினும், கர்த்திருத்துவாதிகள் எவையும் உண்டாகாவாகலின், பிரதிபிம்பத்திற்கு ஜீவத்துவம் சொல்லுதல் கூடாது.

அதிஷ்டான சைதன்னியத்திற்கு ஜீவத்துவம் சொல்லலாமென்றால், அது நிர்விகாரமாதலின், அதனிடத்துச் சவிகாரமான ஜீவத்துவத்தை ஆரோபித்தல் கூடாது. அந்தக்கரணத்தையும் பிரதிபிம்பத்தையும் சேர்த்து ஜீவனென்னலாமெனின், இவை யிரண்டும் கற்பிதங்களாதலின் ஜீவனுக்கு நித்தியத்துவம் இல்லாமற்போகும், நித்தியத்துவ மில்லாது போயின் பின்னர் முக்தர் எவரும் இல்லாது போகவேண்டி வரும். ஆதலின் அவற்றிற்கு ஜீவத்துவம் சொல்லுதல் கூடாது.

அதிஷ்டான சைதன்னிய பிரதிபிம்ப சைதன்னியங்களைச்சேர்த்துச் சொல்லலாமெனின், அவை கேவல சைதன்னியமாத்திர நிர்விகாரங்களாதலின் அவற்றிற்கு, கர்த்திருத்துவ போக்திருத்துவாதி விகார லக்ஷணமான ஜீவத்துவம் சொல்லுதல் கூடாது. அதிஷ்டான சைதன்னியத்தையும் அந்தக்கரணத்தையும் சேர்த்து ஜீவனென்னலாமெனின், கண்ணாடியையும் கண்ணாடிக் கதிஷ்டான சைதன்னியத்தையும் சேர்த்து ஜீவனென்று சொல்லவேண்டி வரும். ஆதலின் இவ்விரண்டையும் சேர்த்து ஜீவனென்று சொல்லுதல் கூடாது.

அந்தக்கரணத்தையும், அதற் கதிஷ்டான சைதன்னியத்தையும், தற்பிரதிபிம்ப சைதன்னியத்தையும் சேர்த்தே ஜீவனென்று செப்ப வேண்டியது.

(வரும்.)

பத்திராதிபர்.

---

## ஞான ராமாயணம்.

(வெண்டாமரை ௩, 69-ம் பக்கத் தொடர்ச்சி.)

சித்தமென் சரயு பெருநதி தாவிச்
சிறந்தவர் போற்றுமெஞ் ஞான்றும்
புத்தியாங் குகன்மாட் டேகிவிட் சேபப்
புலியுறு வனத்தினுட் புகுந்து
மெய்த்தவ மாகுஞ் சித்ரகூ டக்கண்
மேவியே மிகுவகங் காரந்
தொத்திய வரக்க விராதனைக் கிண்டான்
றொல்லையாய் நின்றரா கவனே. (7)

மனமெனுங் காகா சுரன்றனை வென்று
வளருஞ்சங் கற்பமா நயனம்
முனமதைக் கெடுத்து நிருவிகற் பக்கண்
முறைபல தெளியவே யளித்துக்
கனம்பெறு வீர குறுமுனி வாரைக்
காணுபு தீரசா யகம்பெற்
றனறரு காம மாகுசூர்ப் பனகை
யவள்வலி குறைத்தன னங்கே. (8)

காசினி மருளா காமிய மாகுங்
கரனெடு தூடணன் சிரனுந்
தோசியர் மாய வடுக்கணை தொடுத்துச்
சொற்பெறு மிச்சைமா ரீசன்
பேசிய தாலா னந்தமை திவியைப்
பிரியவே விராசதப் பெயர்கொண்
மோசவி ராவ ணன்பெரு வரக்கன்
முன்னியே யன்னையை யடுத்தான். (9)

(வரும்.)

செந்தமிழ்க்கவி, K. V. இராமசந்திர ஐயர்.

## புத்தக நன்கொடை.

புதுவை கவர்ன்மெண்டு புஸ்தகசாலை ஸ்ரீமான் அ. சிங்கார வேலுபிள்ளையவர்களால், 1. திருக்குடந்தைப்புராணம், 2. பூவாளூர்ப் புராணம், 3. நைடதம் மூலமும் உரையும், 4. பிரபுலிங்கலீலை மூலம், 5. இலக்கணக்கொத்து, 6. திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ், 7. திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ், 8. கச்சிக்கலம்பகம், 9. கச்சி ஆநந்தருத்திரேசர் வண்டுவிடுதூது, 10. நால்வர் நான்மணிமாலை, 11. பழமலையந்தாதி உரை, 12. திருமயிலைத் திரிபந்தாதி, 13. திருவிடைமருதூர் உலா, 14. அகிலாண்டநாயகி மாலை, 15. திருவருட்பா உண்மை விளக்கம், 16. சிங்கார ரசமஞ்சரி, 17. மநுநீதிச் சக்கரவர்த்தி வாசகப்பா ஆகப் புத்தகங்கள் பதினேழும், புதுவை ஸ்ரீமான் நல்-சவரிநாதமுதலியாரவர்களால், 1. சந்திரசேகரன் சரித்திரம், 2. ஜெகசேகர சத்தியவதனி சரித்திரம் ஆகப் புத்தகங்கள் இரண்டும் நமது கலைமகள் கழகத்தின் புத்தக நிலையத்திற்கு நன்கொடை யளிக்கப் புட்டன.

அன்புகூர்ந்து இப் புத்தகங்கள் கொடுத்த இப் பரோபகார சீலர்களுக்கு, புதுவைக் கலைமகள் கழகத்தார் பெரிதும் நன்றி செலுத்துகின்றார்கள்.

தி. திருப்புளிசாமி ஐயர்,

கழகத்தின் காரியதரிசி.

## புத்தக வரவு.

### ஜெகசேகர சத்யவதனி சரித்திரம்.

இஃது பஞ்சரஸம் என்ற புத்தக வரிசையில் முதலாவது ரஸமாகிய ஒரு கதைப் புத்தகம். இடையிடையே சந்தர்ப்பத்திற்கேற்ற வர்ண மெட்டுக ளமைந்த பல இசைப்பாட்டுகளுடன் கல்விமான்களால் ஒரு கற்பனை நாடகமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதை வெளிப்படுத்தினவர் புதுவை ஸ்ரீமான் நல் - சவரிநாத முதலியார். இதன் விலை அணா 12. இப் புத்தகம், புதுச்சேரி, ஆநந்தரங்கப்பிள்ளை வீதி, 34-ம் நெ. வீடு, ம. ள-ள-ஸ்ரீ பொன் - நல்லதம்பி முதலியாரிடம் கிடைக்கும்.

ப—ர்.

157

பல கண்காக்ஷிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

# பி. சுப்பருய், ஆயுர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து
இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

## பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

24. இரக்ஷாமிருதம்:— தாவர வர்க்கத்தைச் சார்ந்த அநேக அபூர்வ மூலிகைகளால் செய்யப்பட்ட இச் சூர்ணம் காபி தேயிலைக்குப் பதிலாக உபயோகப்படுத்துவதற்காகவே தயார் செய்யப்பட்டிருக்கிறது. காபி தேயிலைக்குள்ள துர்க்குணங்கள் இதற்கில்லை. காபி பொடியை எவ்விதம் உபயோகிக்கிறோமோ அவ்விதமாகவே இதையும் உபயோகிக்க மிகவும் ருசியான பான மாகும். அரைக் குழந்தை முதல் விருத்தாப்பியர்கள் வரையில் எல்லோரும் உபயோகிக்கலாம். சுரம், ஜன்னி, கர்ப்பம், பிரசவம், காலரு முதலிய காலங்களில் மேற்படி சூரணத்தின் கஷாயத்தை பாலுடன் அல்லது பாலை சேர்க்காமல், சமயத்திற்குத் தக்கபடி உபயோகிக்க, ஜனங்களை நோய்களிலிருந்து குணப்படுத்துவது மன்னியில், நோய் வாராமல் காக்கும். பித்தவாயு, காசம், க்ஷயம், அஜீர்ணம், மலச்சிக்கல், தலைவலி முதலியவைகளைப் போக்கும். இரத்தத்தை சுத்திசெய்து தாது விர்த்தியையும், தேக ஆரோக்கியத்தையும் தரும். அக்கினி மாந்தமுள்ளவர்களும், மதுமூத்திரம், அதிமூத்திர ரோகிகளுக்கும் அருமையான வஸ்து. இதை வழக்கமாய் உபயோகித்துவந்தால் மதுமூத்திர ரோகிகளின் நீரிலுள்ள தித்திப்பையும், நீரின் அளவையும் குறைத்து, மூத்திர ரோகத்தை அடியோடு குணமாக்கும். தேகத்தின் உஷ்ணத்தைச்

158

சாந்தி செய்யும். மூளையைப் பலப்படுத்தி, ஞாபக சக்தியை அதிகப்படுத்தும். மாணுக்கர்கள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள், பகைக்கத்தக்க குணமுள்ள காபி தேயிலையை விட்டுவிட்டு, இதை உபயோகிக்க அருமையான சூர்ணமாகும். டப்பா 1-க்கு விலை அணு 6. வி. பி. செலவு அணு 3 பிரத்தியேகம்.

25. சர்பத்துகள் :— திராக்ஷைப்பழம், நன்னரிவேர், ரோஜா புஷ்பம், வாழைப்பழம், எலுமிச்சம்பழம், மாதுளைப்பழம், கிச்சிலிப்பழம், பாதம், அன்னசிப்பழம், துருஞ்சிப்பழம், கொமட்டிப்பழம், சீர்மை இலந்தைப்பழம், தாமரை புஷ்பம், இஞ்சி சர்பத்துகள் ஷை சர்பத்துகள் பழ வகைகளின் சத்துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் துளிகள் காணக்காணவே உபயோகிக்கவேண்டும். ஒரு சேர் குளிர்ந்த ஜலத்திலாவது, சோடாவாட்டரிலாவது, சுமார் 5 துளிகள் சேர்த்தால் மிகவும் இனிப்பாகவும், எந்தப் பழ சர்பத்து உபயோகிக்கப்பட்டதோ, அந்தப் பழத்தின் மதுரமான வாசனையோடுங் கூடிய சர்பத்தாகும். ½ அவுன்சு சீசாக்களில் விற்கப்படும். இச் சிறு சீசாவிலுள்ள சர்பத்து 50 சேர் குளிர்ந்த ஜலத்துடனாவது சோடாவாட்டரோடாவது சேர்த்தால் 50 சேர் உசிதமான சர்பத்தாகும். அரை அவுன்சுள்ள சீசா 1-க்கு விலை அணு 8. வி. பி. செலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.


P. SUBBAROY,

AYURVEDIC PHARMACY,

Sri Venkatesa Perumal Koil Sannathy,

TANJORE.


---

N. B. — என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை பறங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால் இனி எல்லா ஆர்டர்களும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக் கோருகிறேன். பறங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.